

மக்கள் விடுதலை


# புதிய மனிதன்

இலக்கிய இதழ்

இதழ் எண் : 91 மகிழ்ச்சிக்கு வழி மார்க்சியமே சூன் 1 2022

## ஒரு எழுச்சி உதயம்

## காலக் குரல்







## புதிய மனிதன்

இலக்கிய மாத இதழ்

இதழ் எண் : 91 ஜூன் 1 – 2022

பொறுப்பாசிரியர்

**பாட்டாளி**

ஆசிரியர்

**ஜெ. சிதம்பரநாதன்**

ஆசிரியர் குழு

**பேரா. திருமா**

**விடுதலைக்குமரன்**

**மு. மணிகண்டன்**

வடிவமைப்பு

**பாட்டாளி**



மின்னஞ்சல் முகவரி

puthiyamanithanithazh@gmail.com

வலைப்பூ

puthiyamanithanithazh.blogspot.com

புலன எண் (வாட்ஸ் ஆப்)

94435 45262


மின்னஞ்சல் மற்றும் புலனம் வழி வரும் படைப்புகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். கையெழுத்து, தட்டச்சுப் பிரதிகளை ஏற்றுக் கொள்ள இயலாது. படைப்புகளை unicode latha font - இல் .docx file ஆக மட்டும் அனுப்பவும்.

## நுழைவாயில்


**தலையங்கம்**

ஒரு எழுச்சி உதயம் 3

**அஞ்சலி**

**கவிதை வெளி**

பாரியன்பன் நாகராஜன் 6

வசந்த தீபன் 7

சதீஷ் குமரன் 12

**சிறுகதை வெளி**

தனலெட்சுமி 15

**கட்டுரை வெளி**

பாட்டாளி 34

கீற்று இணையத்தில்

புதிய மனிதன் 37

தலையங்கம்



# ஒரு எழுச்சி உதயம்

## மக்கள் விடுதலை பண்பாட்டுப் பேரியக்கம்

உலகளாவிய மனித இனங்களில் செழுமையான வளமையான மொழியையும், செம்மாந்த தனித்ததொரு பண்பாட்டையும் கொண்டது நம் தமிழ் இனம். ஆதி ஆதிக்க முதலாளியமும், அதன் சுரண்டலுக்கான அடக்குமுறைகளும் ஒடுக்குமுறைகளும் உலகந்தழுவி மனித குலம் எதிர்கொண்டாலும், அதனோடு சாதியும் அதன் படிநிலைக் குரூரங்களும், நம் தமிழ் இனம் உள்ளிட்ட பிற இந்திய ஒன்றிய இனங்களுக்கும் விதிக்கப்பட்ட வன்கொடுமை.

நாம் களமாடும் மண் இந்தத் தமிழ் மண். நாம் நம் நிலத்தில் வலுவாகக்

# புதிய மனிதன்

காலூன்றி நின்று, தோழமை ஒருமைப்பாட்டுக் கரங்களை விரியத் திறந்து, அனைவரையும் ஆரத் தழுவி அணைத்துக் கொண்டு, உலகு தழுவிய மனித குல விடுதலைக்காய் களமாட வேண்டியவர்கள் நாம்.

அதற்காக இத்தமிழ் மண்ணில் எழுந்த செங்கொடி இயக்கம் உள்ளிட்ட பிற விடுதலை இயக்கங்களின் கலை இலக்கியப் பண் பாட்டுப் பெரு வெளியின் வரிசையில் புதிய விடுதலைக் கீற்றாய்... மக்கள் விடுதலைச் சிந்தனைக் கருக் கொண்டு, செயல்வடிவ உருவெடுத்து எழுச்சியோடு இன்று புதிதாய்ப் பிறந்திருக்கும் 'மக்கள் விடுதலை பண்பாட்டுப் பேரியக்கத்தை' புதிய மனிதன் தோழமைக் கரமுயர்த்தி வரவேற்கிறான்.

புதிய மனிதனின் தாகமும்... இலக்கும்... மக்கள் விடுதலை பண்பாட்டுப் பேரியக்கத்தின் தாகமும் இலக்கும் ஒன்றே.

அது சாதி ஒழிந்த தன்னாட்சி கொண்ட சோசலிசத் தமிழ்நாடு.



# புதிய மனிதன்

அஞ்சலி

தமிழீழ மற்றும் தமிழ் இலக்கிய நெடும்பரப்பில் தமது கதைகள், கட்டுரைகள், நாவல்கள் மூலம் பரவலான கவனத்தை ஈர்த்தவர் தோழர் செ.க என்கிற செ. கணேசலிங்கன் அவர்கள். படைப்பிலக்கியத்தைப் போலவே பொதுவுடைமைத் தத்துவக் கருத்துக்களை மிக எளிமையாக கடித வடிவில் எழுதி எல்லோரையும் கவர்ந்தவர். குமரன் என்கிற பெயரில் இதழையும், குமரன் பதிப்பகம் மூலமாக காத்திரமான பலப்பல படைப்புகளையும், படைப்பாளிகளையும் தமிழ் கூறு நல்லுலகத்திற்கு அறிமுகப்படுத்தியவர். இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசு, தமிழக அரசின் விருது உள்ளிட்ட



பல விருதுகளையும் பரிசுகளையும் பெற்றவர்.

ஆற்றல் மிகுந்த மூத்த முன்னோடிப் படைப்பாளி செ.க என்கிற செ. கணேசலிங்கன் அவர்களின் மறைவிற்கு புதிய மனிதன் தனது புகழஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.

# பாரியன்பன் நாகராஜன் கவிதைகள்

கோடாரியால்
வெட்டுப்படுவதை
நம்பிக்கைக்குரிய
வேர்களிடத்தில்
சொல்வதில்லை மரங்கள்.

இரவு நிலவைத்
தின்று கொண்டிருக்கிறது
குளத்தில் மீன்கள்.

ஆகாயத்திற்குமுண்டு
பறவையைப்
பறிகொடுத்த வலி.

வானம் பொய்த்ததால்
வயிற்றுப் பசியைத் தீர்த்தது
விளைச்சலுக்கென இருந்த
விதை.

குளம் தெளிந்ததும்
இயல்பு நிலைக்குத்
திரும்பியது
கல்பட்டு உடைந்த வானம்.

இயற்கையை நேசிக்கும்
பறவைகளின் கூடுகளில்
இல்லை கதவுகள்.

குவளையில் நிலவு
தண்ணீர் வழியே நிரப்புகிறது
வயிற்றை.



## வசந்ததீபன் கவிதைகள்

### நிழலின் நிழல்

நிறைய கதவுகள்
அடைபட்டிருக்கின்றன
நிறைய கனவுகள் பூக்காது
உதிர்ந்திருக்கின்றன
நிறைய கடவுள்கள் பிறந்து
கொண்டேயிருக்கின்றனர்
நகத்தைக் கடித்து
மூளையைக் கசக்கி
எழுதினேன் ஒரு கவிதை

காற்று போன பலூன்
மண்ணுள் புதையும்
பூவல்ல பெண்
முள் அல்ல பெண்
பூவாகவும் முள்ளாகவும்
இருக்கணும் பெண்

சென்ற இடங்களை
சொல்லத் துவங்கினேன்
சுவையானவைகளை
விவரித்தேன்
கஷ்டங்களை கண்ணீரை
ஏனோ சொல்லவில்லை

நட்சத்திரங்கள் சிரிக்கின்றன
நானும் சிரிக்கிறேன்
நிலவே நீயேன் அழுகிறாய்?
நெருங்குகிறேன் விலகுகிறாய்
விலகுகிறேன் நெருங்குகிறாய்
நீடிக்கிறது ஊடல்
விளையாட்டு... விளையாட்டு



# புதிய மனிதன்

காயாம் பூக்கள்
பூத்திருக்கின்றன
காடெல்லாம் நீலக்கடல்
காற்றுவெளியிடையே
அமுதம்

சிலுவையில் ஏசு
தொங்குகிறார்
சாப்பாட்டு மேஜையில்
வறுத்த மாமிசம்
கடைசி விருந்து

நியாயம் மெல்லச்
சாகுகிறது
அநியாயம் கை கொட்டிச்
சிரிக்கிறது
நீதி வேடிக்கை பார்க்கிறது

ஆற்றில் அலையடிக்கிறது
எங்கும் மணல் வெளி
கானல் நீர்

பறவைகள் கூடு
அடைகின்றன
அந்தி இருளுக்குள்
விழுகிறது

மோனங்கள் மூண்டு
எழுகின்றன
நிம்மதியான இடம்
நினைவுகளெங்கும்
தொடரும்

தாயின் கர்ப்பகிரகம்
சிட்டுக் குருவிகள் திரிந்த
நிலம்
சீதளக்காற்று வீசிய
பூந்தோட்டம்
சாம்பல் பறக்கும் சுடலை
சாலையோரம் பூ மரங்கள்
சிரிக்கின்றன
நீலவானில் வெண் புறாக்கள்
நடனமிடுகின்றன
சாயங் காலத்திற்குச்
செல்கிறேன்...செல்கிறேன்
கண்ணில் விழுந்தாள்
நெஞ்சுக்குள் உதித்தது
நிலவு
திசையெல்லாம்
ஒளிப்பிழம்பு...ஒளிப்பிழம்பு

குழந்தைகள் ஆடிப்
பாடுகின்றனர்

# புதிய மனிதன்

கனவுகள்
பராமரிக்கப்படுகின்றன
மாற்று வழியில்
செல்லுங்கள்...செல்லுங்கள்

பயம் துரத்துகிறது
துணையாய் தனிமை
வாழ்ந்து தீர்க்கணும்...
தீர்க்கணும்

இழப்பின் வலி
இழந்தவர்க்கு
அவனும் அவளும்
ஓடிப்போய்விட்டனர்
இரு குடும்பங்களின்
இதயங்கள் சிதறின
குழந்தைகள் பொம்மைகளா-
யினர்
பொம்மைகள் குழந்தைகளா-
யின

கோமாளி கூத்தாடுகிறான்
பட்டம் மேலேறுகிறது
பலூன் கீழிறங்குகிறது

காற்றின் ஊடல்
ஈர ஆற்று மணல்
காலடித் தடங்கள்
சுவரில்லா சித்திரங்கள்...
சித்திரங்கள்

மலைக்குள் எம்
ஜிய்யான்கள்
கடலில் எம்
முப்பாட்டனார்கள்
எம் நிலம் எம் உயிர்
எம் உடல்...உடல்
மழைச்சாலையில் யாரும்
இல்லை

ஒப்பாரியிடும் காற்று
இறந்து கொண்டிருக்கும்
இணை பிரிந்த புறா.

## உடையும் படிமங்கள்

காகங்கள் அபூர்வமானவை
எடுபிடிகளாய் எவர்க்கும்
இருந்ததில்லை
அசிங்கப்படுத்தப்படுகின்றன
காலந்தோறும்
நிலவு
தீக்கிரையாக்கப்பட்டது
சூரியன் நீருக்குள்
மூழ்கடிக்கப்பட்டது
மின்னல் மட்டும்தான்
தப்பித்து விட்டது
புல்லினுள் வேட்டையாடும்
குறு பூச்சிகள்
நாவு நீட்டித் திரியும் மஞ்
சள் தவளை
சுழித்தோடிப் பாய்கிறது
எறியபட்ட சிகரெட் தீ
கருவேலஞ் செடி மேல்
ஓணான்
கிளையில் ஊரும்
எறும்புகளைத் தின்கிறது
பசி தீர்க்க மேலேறுகிறது
கொம்பேரி மூக்கன்
மரம் வெட்டப் போனான்
ஈப்புலி
வனமெல்லாம்
பொட்டலாக் கிடந்துச்சு
வேப்பமுத்த புதச்சுட்டு
வீடு வந்து சேர்ந்தான்
இச்சம் புதருக்குள்
ஈன்று கொண்டிருக்கிறது
வரையாடு
காவலுக்கு மின்மினிகள்
பூச்சாண்டி வருவான்
பூதம் வரும்
புஸ்ஸுன்னு ஆக்கிருச்சு
வீடியோ கேம்.

# புதிய மனிதன்

## அலையின் நுரை

கடல் கொந்தளிக்கிறது
கவிதையில் ஏறி
பயணிக்கிறேன்
கரை காணுவதற்குள்
நான் மூழ்கிப் போகலாம்

பறவையின் நிழல்
நிலமெங்கும் படருகிறது
முட்டையிலிருந்து வெளி
வந்த புழுக்களாய் ஜனங்கள்
பறவையை சுட்டு
வீழ்த்த கவிதை செய்து
கொண்டிருக்கிறேன்

காற்றில் பறந்து வரும்
ஒரு மல்லிகைப் பூ
ஒற்றையடிப் பாதை
மூடு பனி
குதித்தாடுகிறது சிற்றகல்
குலைந்தோடுகிறது இருள்
மனசெல்லாம் வெளிச்சம்

வானவில்லில் கண்கள்
விழிக்கின்றன
வண்ணப்பூக்களில்
இதயங்கள் துடிக்கின்றன

வண்ணத்துப்பூச்சியின்
முதுகில் மின்மினி
பயணிக்கிறது
நட்சத்திரங்கள் தொலைவில்
மின்னுகின்றன
ஆசைகள் நெஞ்சுக்குள்
சுற்றித் திரிகின்றன

கல் கரைந்து
கொண்டிருக்கிறது
நதியின் புன்னகை
கரையோர புற்களின்
குதூகலம்
நறுமணம் கமழும் தனிமை
பூக்களைக் கொளுத்தியது
கொடிகளை எரித்தது
வெயிலின் உக்கிரம்

நானே நல்ல மேய்ப்பன்
நானே தப்பி வந்த ஆடு
எனக்கு நானே மேய்ப்பன்

## சதீஷ் குமரன் கவிதைகள்

சீட்டு எடுத்தது கிளி
கிடைத்தது அதற்கு
நெல்மணி
பிரித்த சீட்டுள் நரகம்
நாக்குத் துருத்திய காளி
அரிவாள் ஏந்தி நிறை
போதை பூசாரி
தலை உலுக்காமல் நடுங்கும்
ஆடு
கண்ணீர் கறையுள் தோன்றி
மறையும்
நெஞ்சருக்கும் சித்திரங்கள்.

●

புகார் கொடுத்திட
சாலையில் உட்கார்ந்து
மறியல் செய்ய
சட்டம் ஒழுங்கை சீர்குலைக்க
வெடிகுண்டுகள் வீசி
மயக்கமருந்து கொடுத்து
கட்டிப்போட
துப்பாக்கியால் சுட்டு



## புதிய மனிதன்

நடவடிக்கை எடுக்க
கும்கிகளை கொண்டு
விரட்டியடிக்க
எதுவும் முடியாமல்
எவற்றுக்கும் அஞ்சாமல்
ஒற்றையானையெனத்
திரிகிறது
நள்ளிரவு நிலவு.

●

பெருத்த மவுனத்துடன்
முடிச்சிட்டு கிடக்கும்
மானுடத்தின் துர்நாற்றப்
பொட்டலங்களை தன்
வாயால் அவிழ்த்து
உதிர்க்கிறாள் வீதிகளில்
குப்பைகளை சுவைக்கும்
காமதேனு.

●

காமம் செப்பாது
கண்டதையும் மொழிகிறது
உன்விழி
நீ காதலியாவதும் நான்
காதலனாவதும் நம் காதலின்
கடனாகும்

கொல்லேர் கூர்விழியில் நீ
எனைத் தாக்குவதும்
முல்லைநில
நெடும்பனையாய் ஒத்தையில்
நான் காத்துக்கிடப்பதுவும்
நம் இளமையின் கடனாகும்,
ஏகாதிபத்தியமாய் நீ
ஏகபோகியானவுடன்
வளம்குன்றாமல் என்ன
செய்யும் என் திணைகள்
ஒப்பந்தங்களை எரித்துவிட்டு
கையெழுத்து இடாமலேயே
எல்லை மீறுகிறாய்
என் ஆநிரைகளை களவாடி
வெறியாடல் நிகழ்த்துகிறாய்
நீ எவ்வழி சென்றாலும்
அவ்வழி நிற்பவள் என் நிறை
சூலிதான்
என் ஒரு சொட்டு
உதிரம்தான் உனக்கு
ஆட்சிபீடம்.
மகளிடம் தோற்று
மனையாளிடம் தோற்றுப்
போவதே உன் பிறவிப்பயன்
சாகசம்

# புதிய மனிதன்

தொல்லுலகில்
நல்லோருக்காக அல்ல
என் காதலின் பொருட்டே
எல்லோர்க்கும் பெய்கிறது
இப்பெருமழை.

●

ஒரு மரம் என்பது
மரம் என்பது
மரம் என்பது
மரம்தான்
பொம்மையன்று

●

தத்தளிக்கிறது
மணல் குவாரிக்குள் விழுந்து
தாகத்திற்கு நீர்த்தேடி
ஆற்றுக்குள் இறங்கிய நிலவு

●

நிலத்தினும் பெரிது
வானினும் உயர்ந்தது
பெருநெல் அளந்த
உழுதுண்டக் குடியின்
கொடுந்துயர்.

●

உரக்கடை வியாபாரிகள்
குடித்ததேயில்லை
ஒரு போதும்
பூச்சிக்கொல்லிகளை

●

மேல்நோக்கியே எரியும்
போதும்
கீழிருப்பவர்களையே
எரிக்கும் கார்ப்ரேட்
தீ கொடிது.

●

நெடும் பனைகள் எடுத்த
தற்படங்களில்
வரிசைக்கட்டி நிற்கின்றது
பொக்கலின்கள்

●

விற்பனைக்கு வந்திருப்பதை
அறியாமல்
விலைபேச வந்திருப்போரிடம்
வாலாட்டிக் குழையும்
நாய்களென நீயும் நானும்
சந்தையில்

●

சிறுகதை வெளி

# காதம்பரி

தனலெட்சுமி

**கா**தம்பரி......!

அவள் பெயரில் மட்டும் வசீகரமில்லை, தோற்றத்திலும், குணத்திலும், ரசனையிலும்.... இப்படி என்னென்னவோ சொல்லலாம்... அவள் தோழமைக்கு ஏங்குபவர்கள் ஆயிரக்கணக்கைத் தாண்டலாம்.... சே...! ஏன் என் புத்தி இப்படிப் போகிறது?

அவள் எல்லோருடனும் நன்கு பழகுபவள். அன்பு மிக்கவள். அவள் எப்போதும் எல்லை மீறியவள் அல்லள். சாதாரணமாக தும்மினால்கூட காற்றைவிட



# புதிய மனிதன்

வேகமாக வதந்தி பரவிவிடும் இக்காலத்தில் அவளைப் பற்றித் தவறுதலாக ஒரு 'கிசு கிசு'வோ வதந்தியோ பரவியதில்லை. இத்தனைக்கும் அவள் செல்லும் கூட்டங்களுக்கெல்லாம் முடிந்தவரை நானும் போய்விடுவேன். அவளோடு தோழமையோடு இதுவரை பழகிவருகிற எத்தனையோ இலக்கிய வட்ட நண்பர்கள் எனக்கும் நண்பர்களே. நண்பர்களும் அப்படித்தான். எல்லோர்க்கும் அவளிடம் ஒரு ஈர்ப்பு இருந்ததாய் என்னால் உணர முடிந்தது. அதில் எனக்கு கொஞ்சம் பொறாமையும் உண்டு.

ஆனால் அவளுக்கும் எனக்கும் குடும்பம் என்ற ஒரு கட்டமைப்பு இருக்கிறது. எந்தவொரு பெண்ணையும் தவறான நோக்கில் காணும் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று எனக்கு நானே பலமுறை அறிவுரை சொல்லிக் கொண்டதுண்டு. ஆனால் வேதாளம் மீண்டும் மீண்டும் முருங்கை மரம் ஏறிய கதைதான். அவளைக் காணும் சந்தர்ப்பங்களில் எல்லாம் என்னையும் மீறி எண்ணங்களை ஆக்ரமித்துக் கொள்ள இவள் போன்ற பெண்ணால் எப்படி சாத்தியப்படுகிறது என்று வியந்திருக்கிறேன்.

"டேய் ராகவா! டவுன் ஹாலில் இன்னைக்கு ஒரு இலக்கியக் கூட்டம் இருக்குது. பத்திரிக்கை உனக்கு வந்ததா?"


காதம்பரி அதில் பாரதியார் பாடலைப் பாடுகிறாளாம். அவள் கணவர் பெயரோடு 'காதம்பரி விஸ்வநாதன்'ன்னு போட்டிருந்தது.

"நீ வர்றியா?" என்றான் என் கல்லூரித் தோழன் வைத்தி என்னும் வைத்தியநாதன்.

# புதிய மனிதன்

"போகலாம்னு இருக்கேன். வீட்ல ஒரு வேலை. பார்க்கலாம். முடிஞ்சா வரேண்டா". என்றேன்.

படுபாவி! இவனுக்கும் பத்திரிக்கை வந்துவிடுகிறது. நான் எங்கே பாடலை பார்க்கப் போகிறேன். காதம்பரி என்ற பெயரை மேடையில் உச்சரிக்கும்போதே எங்கிருந்தோ அரங்கத்தின் மூலையில் இருந்து தேவதைபோல் எழுந்து காற்றில் மணம்பரப்ப, அவள் விரைவாக மேடையை நோக்கி நடப்பதிலிருந்து, அவள் கைகளும் உதடுகளும் தருகின்ற அசைவினில் என்னை மறந்து லயித்துப் போவேன். இவன் என்னைத் தேடிப் பிடித்து பக்கத்தில் வந்து என்னிடமே காதம்பரியின் பாடலை ஆஹா, ஓஹோ என்று புகழுவதோடு அவள் என்னவோ இவனிடம் மட்டுமே மிகவும் நெருக்கமாக இருப்பதுபோல் பேச ஆரம்பித்து விடுவான்.



தோற்றமும் சரி, தேனினும் சுசீலாம்மாவின் குரலும், ஜானகி அம்மாவின் குரலும் கலந்த கலவையாகத் தோன்றும்.

என் மனைவியிடம் காதம்பரியைப் பற்றி நிறைய கூறியிருக்கிறேன். அவள் அரங்கேற்றம் செய்த வயலின் கச்சேரிக்கும் அழைத்துச் சென்றிருக்கிறேன். அவள் எழுதிய சிறுகதைகள்

## புதிய மனிதன்

எந்தப் பத்திரிக்கையில் வந்தாலும் என் மனைவி காவேரியிடம் காட்டிப் படிக்கச் சொல்லுவேன். காதம்பரிக்கு நான் ஒரு பிரபல எழுத்தாளன் என்ற வகையில் என்னிடம் மிகவும் மரியாதை கலந்த அன்புண்டு. அவள் என் விமர்சனங்களைக் கேட்பதிலும், பதிலுக்கு அவள் எழுத்துக்களை நான் விமர்சிக்கும் ரீதியிலும் பரஸ்பர ஆர்வம் கொண்டிருந்தோம் என்ற ஒரு விஷயமே எங்களுக்குள் பழகவும் பேசவும் எளிதான வாய்ப்புகளைத் தந்து கொண்டிருந்தன.



ஒரு முறை நானே காதம்பரியிடம் பேசும்போது "ஒரு நிமிஷம் காதம்பரி. உங்களோட என் மனைவி காவேரி பேசணுமாம்" என்று அலைபேசியைக் கொடுத்துவிட்டேன். அன்றைய பொழுதெல்லாம் அவள் எனக்கு மட்டுமல்ல. என் மனைவிக்கும் நெருங்கிய தோழி ஆகி விட்டாள் என்ற மகிழ்ச்சியில் திளைத்தேன்.

என் மகிழ்ச்சிக்குச் சிகரம் வைத்ததுபோல காவேரியே,

"என்னங்க, இந்த நவராத்திரிக்கு நம்ம வீட்டுக்கு ஒரு நாள் காதம்பரியைக் கூப்பிடலாமேன்னு நெனைக்கிறேன்" என்றபோது, நான் ஏதோ மூன்றாம் மனிதன் போல அவள் சொல்கிறாளே என்கிறமாதிரி எனக்குள் பொங்கிய ஆவலை மறைத்துக் கொண்டு,

## புதிய மனிதன்

"ம்..ம்..ம்... இது பெண்கள் விழா. நான் சொல்ல என்ன இருக்கு.. கூப்பிடேன்.." என்று முகத்தை மிகச் சாதாரணமாய் வைத்துக் கொண்டேன்.

என் குடும்பத்தில் எனக்கும் காவேரிக்கும் பலமுறை சச்சரவுகள் வந்து போகும். உறவுகளை, சூழ்நிலைகளை என் சுபாவத்தை அனுசரித்துப் போவதில்தான் இந்தக் குளறுபடிகள் நடக்கும். இது எல்லோர் குடும்பங்களிலும் வருவதுதான் என்றாலும், சிலநேரங்களில் வாக்குவாதம் உச்சகட்டத்திற்குப் போய் விடுகையில் உண்ணாவிரதம், பேசா விரதம் என்பதில்போய் முடியும். மனம் ஒரு சலிப்பு வெறுப்பில் இருக்கும் போதெல்லாம் காதம்பரியிடமிருந்து அவ்வப்போது வரும் நகைச்சுவைத் துணுக்குகள், வாழ்த்துகள், சுவையான இலக்கியச் செய்திகள் என் மனதுக்கு மிகவும் ஆறுதலைத் தருவதாய் உணருவேன். அதிலும் அவள் என் மனைவிக்கென பிரத்தியேகமான சமையல் குறிப்புகள், ஆன்மீகச் செய்திகள் என்று அவள் விருப்பம் அறிந்து பொதுவில் அனுப்புவாள்.

"காதம்பரி, காய்கறி மார்க்கெட்டுக்கு வந்தேன். காவேரி கூப்பிட்டா போல. அவசியம் கொலுவுக்கு வந்துடுங்க, நானும் ஆவலோடிருக்கேன்" என்று சொல்லிவிட்டு அதற்குமேல் பேச முடியாமல் வைத்துவிட்டேன். என்னையறியாமல் கண்ணில் நீர் நிறைய, உதட்டை அழுத்தி அடக்கிக் கொண்டேன். பொது இடத்தில் என் நடவடிக்கை எனக்கே புதிராகவும் வெட்கமாகவும் இருந்தது.

# புதிய மனிதன்

சாருகேசி ராகத்தில் "நீயே கதி ஈஸ்வரி......" என்று தொடங்கிய காதம்பரியைக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த காவேரியை அவ்வப்போது நோக்கினேன். ஊதுபத்தி மணமும் அந்த அடுக்கு மாடியின் மூன்றாவது தளத்தில் இருந்த என் வீடும் அந்தக் கணங்களில் எனக்கு சொர்க்கபுரியாகப்பட்டது.

"பாட்டு ரொம்ப நல்லா இருந்தது. நல்ல குரல்வளம் உங்களுக்கு. வெத்திலை பாக்கு வாங்கிக்கோங்க" என்றபடி தட்டில் ஒரு பட்டு ரவிக்கையோடு நிறைதாம்பூலம் பூக்களைக் கொடுத்துவிட்டு,

"அடிக்கடி வாங்க, உங்க வீட்டுக்காரரையும் அழைச்சிட்டு வாங்க" என்று புன்னகையோடு கூறினாலும், அது சுருதி பிசகிய வீணை இசைபோல் சூழ்நிலைக்குப் பொருந்தாத சொற்களாய்ப்பட்டது. காவேரியின் சுபாவமே அப்படித்தான். யாரிடம் எப்போது எப்படிப் பேசவேண்டும் என்றே தெரியாமல் உளறி எதிரிலிருப்பவர்களை சங்கடத்தில் ஆழ்த்துவாள். மெல்ல காதம்பரியின் முகத்தைப் பார்த்தேன்.

"ஆகட்டும் மாமி, அவசியம் குடும்பத்தோடு வருகிறேன்" என்று கூறினாலும், சட்டென்று அந்த நிலவு முகத்தில் மேகங்கள் கடந்துபோன இருட்டாய் ஒரு சோகமும் வந்து போனதைக் காவேரி கவனித்தாளா என்று தெரியவில்லை. நான் கண்டுகொண்டேன்.


"லிப்ட்'ல கொண்டு விட்டுட்டு, அப்படியே ஆட்டோ கிடைச்சா ஏத்தி அனுப்பிட்டு வரேன் இவங்களை" என்றபடி காதம்பரியோடு கீழிறங்கி

# புதிய மனிதன்

வந்து ஆட்டோவுக்காகக் காத்திருந்த அந்த நொடிகளில் அவள் ஏதோ சொல்ல நினைத்ததுபோல் தோன்றியது.

அவள் என் வீட்டுக்கு வந்துபோனபின், குடும்பத்திற்கும் அறிமுகம் ஆனபின், இன்னும் அவள் தோழமையை நெருக்கமாய் உணர்ந்தேன். அவளும் அப்படி நினைத்திருக்கலாம் என்பதை அதன்பின்னர் அவள் என்னிடம் நேரிலும் அலைபேசியிலும் பேசும்போதெல்லாம் உணர்ந்தேன்.

அவள் சில வருடங்களுக்கு முன் எனக்குப் பரிசளித்த அவளின் கைவண்ணத்தில் வெளியான இரண்டு கவிதைத்தொகுப்புகளை அடிக்கடி எடுத்து மீண்டும் மீண்டும் படிக்கத்துவங்கினேன். அவளுக்கு கவிஞர் என்ற அங்கீகாரத்தையும் பாராட்டுகளையும் பெற்றுத் தந்த படைப்புகள் அல்லவா அவை? சில தலைப்புகளில் அவள் பேசும் கூட்டத்திற்கு நல்ல வரவேற்பிருக்கும். கூட்டம் முடியும் சமயம் இரவு 9 மணியைத் தாண்டிவிட்டால் அவள் முகத்தில் கலவரம் கூடிவிடும். நான் அவளை என்னுடைய காரிலோ அல்லது பேருந்திலோ பத்திரமாக வழியனுப்பிவிட்டு வருவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தேன். வீடு சேர்ந்ததை மிகப் பொறுப்புடன் குறுஞ்செய்தியாக அனுப்பும் பொறுப்பு என்னைக் கவர்ந்தது.



## புதிய மனிதன்

நாட்கள் மாதங்கள் உருண்டோடின. என் நண்பர்கள் வட்டத்தில் முரளியும் கோவிந்தும்தான் என்னை மிகவும் கலாய்த்துக் கொண்டிருந்தனர்.

"இப்பல்லாம் அந்தக் காதம்பரி கலந்துக்குற கூட்டத்துல அவளை பத்திரமா உன் கார்ல வீடு வரைக்கும் கொண்டு விடறியாமே"

"சே! நீங்கல்லாம் நினைக்கிறபடியில்லடா. அவள் கொஞ்ச தூரத்துலயே இறக்கிவிடச் சொல்லி பத்தடி இருக்கிற அவ வீட்டுக்கு நடந்தே போய்டுறா. வீட்டுக்கு வந்துட்டுப் போங்கன்னு" ஒரு வார்த்தை கூடச் சொன்னதில்லை. அவள் கூப்பிடாம போறது அவ்வளவு நல்லதில்லைனு எனக்கும் தெரியும். ஏண்டா, உங்களுக்கெல்லாம் கொஞ்சமாவது விவஸ்தை இருக்கா? அவளுக்கு என் பையன் வயசுல ஒரு பொண்ணும், அவளுக்கு அடுத்து ஒரு பையனும், ரொம்பப் "பொசசிவ்"வான ஒரு புருஷனும் இருக்கான்ற நெனப்பே இல்லாம பேசறீங்களேடா" உங்களையெல்லாம் திருத்தவே முடியாது" உள்ளுக்குள் ரசித்தாலும் மேலுக்கு இயல்பாய் பேசுவான் ராகவன்.



## புதிய மனிதன்

இந்த வருடம் நவராத்திரிக்குச் சரியாக மூன்று நாட்கள் முன்பே என் பெற்றோரின் சதாபிஷேகம். நாள் குறிக்கப்பட்டது. காவேரியிடம்,

"நம்ம உறவுகளுக்கு மட்டும் 50 பத்திரிக்கைகள் போதும், அப்புறம் நண்பர்கள் வட்டத்துக்கு மட்டும் முகநூல், கட்செவினும் ஒரு குறுஞ்செய்தி மட்டும் அனுப்பிடுறேன். என்ன சொல்ற?" என்றான் ராகவன்.

"நான் என்ன சொல்றது? எப்ப பாரு முகநூல். பத்தாததுக்கு ஆம்பள நட்பு இருக்கோ இல்லையோ, பொம்பளைங்க உங்க கதை, ரசிகைன்னு சொல்லி நாள் பூரா அலைபேசில 'கடல்' போட்டுக்கிட்டு, கெக்க பிக்கன்னு பேசிக்கிட்டு ரொம்ப இளவட்டம் கணக்கா நாளை ஒட்டிக்கிட்ருக்கீங்க. நம்ம புள்ளைக்கு பொண்ணு பாக்குறேன் பேர்வழின்னு அவனுக்கு வர்ற பொண்ணுங்க போட்டோ ஒன்னு விடாம அவனுக்கு முன்னாடியே பாத்து, என்னமோ உங்களுக்கு பாக்குற மாதிரி மொறச்சிப் பாத்துட்டு, விசாரிக்கிறேன்ற சாக்குல ஏதாச்சும் ஒரு மாமிக்கிட்ட ஜொள்ளு விட்டுக்கிட்டிருப்பீங்க. இப்போ பெருசா நல்ல புள்ள மாதிரி என்கிட்டே பணிவா அபிப்ராயம் கேக்குறீங்க. வழக்கம்போல உங்க இஷ்டம்" உதட்டை அலட்சியமாய்ச் சுளித்து கேலியும் கிண்டலுமாய்(?) நகர்ந்தாள் காவேரி.

"ஏய்.. திம்சு!" (மிக நெருக்கமான தருணங்களில் மனைவியை இப்படித்தான் கொஞ்சுவான். அவளை எட்டிப் பிடித்து பின்னாலிருந்து காதில் கிசுகிசுத்தான்.

"ஆயிரம் ரசிகை-யிருந்தாலும் என் திம்சுக்கு

நிகராகுமா?" இங்க பாரு. உள்ளூர்ல காதம்பரி மட்டும்தான் இருக்கா. அவளை நவராத்திரிக்கும், சதாபிஷேகத்துக்கும் சேர்த்தே போன்ல அழைப்பு குடுத்துரு. மத்தவங்களுக்கு நான் பார்த்துக்கிறேன்."

"அ த ா ே ன பார்த்தேன். காதம்பரிய வி ட ம ா ட் டீ ங் க ே ள ." உள்ளங்கைகளை விரித்து அழகு காட்டினாள்.

"நிச்சயம் கூப்பிடுறேன் போதுமா. ஆகுற வேலையைப் பாருங்க".

சதாபிஷேகம் விமரிசையாக நடந்தேறியது. காதம்பரி மட்டும் வரவே இல்லை. வைபவத்தில் ராகவனுக்கும், காவேரிக்கும் இடுப்பொடிய வேலை. தேடித் தேடி மிக நெருங்கிய உறவுகளுக்கு நேரில் சென்று பத்திரிக்கை வைப்பதிலும், பூஜைக்கு சாமான்களை வாங்குவதிலும், வரவேற்பதிலும், சமையலுக்கு ஆட்களை நியமித்து வேலை வாங்குவதிலும், இலைக்கொருவராக தனித் தனியாக உபசரிப்பதிலுமாய்ப் பொழுது பறந்தது. கூட்டத்திலும், வாசலிலும், காதம்பரியைக் கண்கள் தேடிச் சோர்வுற்றன. அதைக் கண்டும் காணாததுபோல் வேலைகளில் மும்முரமாய் இருந்தாள் காவேரி. விழா முடிந்த இரவே அடக்க மாட்டாமல் காவேரியைக் கேட்டேவிட்டான்.


"ஏன் காதம்பரி வரவில்லை?"

"அவளுக்கு என்ன அவசர வேலையோ, விடுங்க, நவராத்திரிக்கு வருவா பேசிக்கலாம்."

# புதிய மனிதன்

இவனின் தவிப்பறியாது களைப்பில் தூங்கிவிட்டாள். அவனும் கேள்விகளோடும், ஏமாற்றத்தோடும் தூங்கிப்போனான்.

நவராத்திரி பொழுதுகள் ஓடிவிட்டன. இன்னும் நான்கு நாட்களே மிச்சமிருந்தது நவராத்திரி முடிய. எத்தனையோ அக்கம்பக்கத்து பெண்கள் வந்து சுண்டலும் தாம்பூலமும் வாங்கிச் சென்றார்கள். ஒரு சிலர் பாடும்போது இவன் காதுகள் செவிடாய் எங்கோ நினைவில் மிதந்தபடி சொல்லிக்கொண்டு விடைபெறுபவர்களிடம் அசட்டுச் சிரிப்பைத் தவழ விட்டுக்கொண்டு போலியாய் நடந்து கொண்டவிதம் அவனுக்கே எரிச்சலை உண்டு பண்ணியது. காவேரி கூப்பிட்டும் ஏன் வரவில்லை?



# புதிய மனிதன்

ஒரு போனாவது பண்ணி-யிருக்கலாமே, வார்த்தை தவறி விட்டாய் கண்ணம்மா...... பாடலை சோகமாய் இதயம் ஒரு மூலையில் பாடிக்கொண்டிருந்தது.

அவளின் தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொள்ள மனம் ஏனோ சம்மதிக்கவில்லை. நவராத்திரியும் முடிந்தது. இவன் ராத்திரிதான் விடியவில்லை!

அடுத்த இரு நாளும் தலைவலியும் உடல் சோர்வும் லேசான காய்ச்சலோடும் உறங்கியவன், காலாற நடக்கலாமென்று கடைவீதியிலிருந்து தஞ்சை செல்லும் பொது வழிச்சாலைக்கு வந்து, கையில் வைத்திருந்த மஞ்சள் பையில் அங்கு தள்ளுவண்டியில் புத்தம் புதிய காய்கறிகளை வாங்கிக் கொண்டிருக்கையில், அவனைக் கடந்து சென்ற ஒரு சிவப்பு மாருதி கார் சற்றுப் பின்வாங்கி ஓரம் கட்டி நின்றது.

"ராகவன்! எங்க இந்தப் பக்கம்?"

காரின் முன்கதவைத் திறந்துகொண்டு சிவப்புப் பட்டுப் புடவை, தலை நிறைய பூவுடன் முகமெங்கும் புன்னகை பரவ காதம்பரி! அவள் கணவரையும் பிள்ளைகளையும் அறிமுகப் படுத்தினாள்.



## புதிய மனிதன்

கொடுத்து வைத்தவள் காதம்பரி என்று மனம் கூற, கை குலுக்கிய கணவரையும் புன்னகைத்த அவள் வாரிசுகளையும் கண்களால் அளந்தான்.

"சும்மா வாக்கிங் வந்தேன். எதிர்பார்க்கல.... ஏன் வரல அப்பா சதாபிஷேகத்துக்கும், நவராத்திரிக்கும். ஒரு போனாச்சும் பண்ணி இருக்கலாமே...." வாய் குளறி தொண்டை அடைப்பதுபோல் தோன்ற நல்லவேளையாக நிறுத்தினான்.

அவளோ வெகு இயல்பாக,

"அடடா, எனக்குத் தெரியாதே, தவறவிட்டுட்டேனே," என்றபடி,

"நாளைக்கு உறையூர்ல ஒரு இலக்கிய கூட்டத்துல பேசறேன். உங்களோட கதை குங்குமத்தில் சமீபத்துல பத்தாயிரம் பரிசு வாங்கிச்சுன்னு சொன்னீங்களே போனமாதம், அதை எடுத்துட்டு வாங்க முடிஞ்சா. அந்தப் புத்தகம் எனக்கு கிடைக்கல. இப்போ தஞ்சாவூர்ல இவரோட நண்பர் வீட்டு விசேஷத்துக்குப் போறேன். நாளைக்குப் பாப்போம், உங்க வீட்டுக்கு ஒரு நாளைக்கு எங்க குடும்பத்தோடு வந்து உங்கப்பா அம்மாட்ட ஆசீர்வாதம் வாங்கிக்கறேன்" என்றபடி சென்றுவிட்டாள்.

"என்ன இது? காவேரி அவளை அழைக்கவில்லையா? மறந்து போனாளா? அல்லது வேண்டுமென்றே... சே, சே அப்படி இருக்காது." ஏன் காதம்பரி வரவில்லை என்று கேட்டபோதுகூட, அவள் மறந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லையே. குழம்பியவாறே வீடு சேர்ந்தவன், முகத்தில் எந்த

உணர்வையும் காட்டாமலே, அவளைக் கேட்கலாமா வேண்டாமா என்று நினைத்தவன், மிகவும் நிதானத்தோடு சட்டையைக் கழற்றியபடியே,

"காவேரி.. வழியில காதம்பரியைப் பாத்தேன். குடும்பத்தோட ஏதோ ஒரு விசேசத்துக்குப் போறதா காரை நிறுத்தி சொல்லிட்டுப் போனா. அவ புள்ளைங்க ரெண்டும் ரொம்ப அழகு. வீட்டுக்காரரையும் அறிமுகப்படுத்தி வச்சா" சொல்லிவிட்டு அவள் முகத்தை உற்று நோக்கினான்.

அ வ ே ள ா , "ஓஹோ!" என்றபடி கொல்லைப்புறத்துக்கு சென்று அங்கிருந்த வாழை இலையைச் சதுரமாக வெட்டிக்கொண்டு வந்து அடுக்களைக்குள் நுழைந்து வடையைத் தட்ட ஆரம்பித்தாள்.

இ வ னு ம் அவளிடமிருந்து ஏதேனும் பதில் வருகிறதா என்று எதிர்பார்த்தபடி அங்கிருந்த பானையின் குளிர்ந்த நீரை எடுத்துக் பருகினான் எரிச்சல் தணிய.

அந்த ஒரு நிமிடம் அவள் பதிலுக்காக காத்திருந்தவன் பொறுமை-யிழந்து,

"க ா த ம் ப ரி ை ய க் கூப்பிடலையா நீ நம்ம விசேஷத்துக்கு?"

"ஆமா! கூப்பிடலை. அதுக்கென்ன..... இப்........"

அவள் எதிர் பார்க்கவில்லை முடிப் பதற்குள் 'பொளேர்' என்று அறைந்துவிட்டு வெளியேறியவனை குற்ற உணர்வோடு மிரட்சியும் அதிர்ச்சியுமாய்க் கன்னத்தைப் பிடித்தபடி கண்களில் கண்ணீர் வழியப் பார்த்தாள்.

# புதிய மனிதன்

அடுப்பை அணைத்துவிட்டு கையிலிருந்த மாவையும் எண்ணெயையும் வழித்துக் கழுவிவிட்டு படுக்கையில் சரிந்து தேம்பினாள்.

சரியாக மணி காலை பத்து. மதிய சாப்பாடை வெளியில் முடித்துக் கொள்ளலாம் என்று தோன்றியது. அந்தச் சூழலில் இருந்து விடுபடவே விரும்பி காரை எடுத்துக்கொண்டு வெளியில் கிளம்பினான் பெற்றோரிடமும் காவேரி-யிடமும் சொல்லிக் கொள்ளாமலே.

அவனுக்குப் பிடித்த காவேரிப் படித்துறையில் தென்னை மரங்களிடையே ஒரு ஓரமாய்க் காரை நிறுத்திவிட்டு அமர்கையில், அப்பாவிடமிருந்தும் காதம்பரியிடமும் அழைப்புகள் வந்திருந்ததைக் கவனித்தான். முதலில் அப்பாவை அழைத்தான்.



“டேய், ராகவா.. எங்கடா இருக்க? காவேரிக்கும் உனக்கும் இன்னைக்கி என்ன பிரச்சனை? அழுது முகம் வீங்கிப் போச்சு. உங்கம்மா அவளுக்கு ஏதோ சமாதானம் சொல்லி அவளை ஓய்வெடுக்கச் சொல்லிட்டு, சமைச்சிக்கிட்டிருக்கா. எதுவாயிருந்தாலும் வீட்டுக்கு சாப்பிட வந்துடுறா” கெஞ்சியது மனதை என்னவோ செய்தது.

## புதிய மனிதன்

"சரிப்பா, அதெல்லாம் ஒண்ணுமில்லை. நீங்க அலட்டிக்க வேணாம். நான் சாப்பிட வந்துடுவேன். என்னோட பழைய நண்பனுக்கு உடம்பு சரி-யில்ல. அவனைப் பார்த்து விசாரிக்கத்தான் வந்தேன்." பொய் தேவைப்பட்டது அவனுக்கு.

அடுத்து காதம்பரி-யிடம் பேசினான். நடந்ததை எல்லாம் கூற பொறுமையாகக் கேட்டவள்,

"சொன்னாப் புரிஞ்சுக்குவீங்க. காவேரி ரொம்ப நல்லவங்க. வீட்டுக்குப் போயிச் சாப்பிட்டு அவங்களைச் சமாதானப் படுத்துங்க."

கலகலவென்று சிரித்து,

"இவ்வளவுதானா ராகவ்?... ஒரு விதத்துல என் கணவரைப் போன்ற ஆண்களும், காவேரி மாதிரி ஒரு பெண்ணையும் எனக்கு ஒரே நேர்கோட்ல வெச்சுதான் பார்க்கத் தோணுது. இவங்க மேல ஒரு குற்றமும் கிடையாது. இவங்கல்லாம் நம் அன்புக்காகவும் அருகாமைக்காகவும் ஏங்குறவங்கதான்." எல்லாப் படைப்பாளிகளுக்கும் சரி, கலைஞர்களுக்கும் சரி. தம்பதிகளுக்கிடையே



## புதிய மனிதன்

வர்ற "ஈகோ" தான் இது. நீங்க மட்டுமில்ல, என்னை மாதிரி தேடல் உள்ள பெண்களுக்கெல்லாம் ஏற்படும் அனுபவம் இது. சாதிக்கட்டமைப்புகளால் மட்டுமல்ல, அதை எதிர்த்து நின்று சாதித்திருந்தால் நம் காதல் என்றோ நிறைவேறி இருக்கும். பெண்ணாயிருந்தாலும் என்னிடம் இருந்த துணிவு உன்னிடம் இல்லாது போயிருந்ததில் அன்று பெருத்த அவமானமும் ஏமாற்றமும் என்னைச் சூழ்ந்திருந்தது உண்மைதான். காரணம் திருமணமாகாத இரு தங்கைகளின் பொறுப்பான அண்ணன் நீ. வேதனை மறக்க, என் குடும்பத்தினர் எனக்குக் கொடுத்த நெருக்கடியில்தான் விசுவை மணந்தேன் என்பதை இன்றுவரை ரகசியமாய் வைத்திருக்கிறேன். நம்மோடு போகட்டும். பின் பல வருடங்கள் தொடர்பற்றுப் போயிருந்ததில் காயங்கள் ஆறியிருந்தன தழும்புகளுடன்.

"அது சரி காதம்பரி. அவளுக்கு நம் நட்பைப் பற்றின விஷயத்தையெல்லாம் பேச்சுவாக்கில் சொல்லி இருக்கிறேன் கனிவான பொழுதுகளில்."

"இல்ல ராகவ்! அங்கதான் தப்பு பண்றீங்க, அவங்கவங்களுக்கு அந்தரங்க மனசுன்னு ஒன்னு இருக்கும். ஆனா நியாய தர்மங்களுக்கு உட்பட்டுதான் நிச்சயம் நாம் நடந்துக்குவோம். என்னைப் பத்தி நீங்க அதிகமா ஒரு படி மேல போயி அப்படியே வெளிப்படுத்தினா ஒரு பெண் மனசு இயல்பாய் இப்படித்தானே நினைக்கும்? அவளோட உணர்வுகளுக்கு மதிப்பு கொடுங்க. மண்ணுக்குள்ளே மறையும்போது நிறைவேறாத, சொல்லமுடியாத, விஷயங்கள் எல்லாருக்கும் கண்டிப்பா

ஒன்னு இருக்கும். அது எந்த ஒருவரின் மனசையோ வாழ்க்கையையே பாதிக்காம பாத்துக்கிறதுலதான் அவரவருடைய மகிழ்ச்சி இருக்கும். ஒரு குடும்பம் அமைந்துவிட்டால் கிடைத்த உறவுகளைப் பேணுவதில், கடந்தகால ஏமாற்றங்களை, சோகங்களை மறந்து சொந்தங்களுக்காகவே தன்னை தாரை வார்த்துக்கொள்வாள். அப்படிப்பட்டவங்க வாழ்க்கைல மீண்டும் புயல் வீச, குழப்பத்தை, மனக்கசப்பை ஏற்படுத்த யாருக்கும் உரிமை இல்லை. பழைய நட்பை ஒரு நல்ல நோக்கத்தோட புதுப்பிச்சுக்கறதுல தவறில்லை. அந்த நட்பு எதிர்பார்ப்பைக் கடந்ததாக, வரம்புக்குட்பட்டதாக இருந்தால் இருவருக்குமே நல்லது. அதுதான் நியாயமும் கூட. அது முடியாதுன்ற பட்சத்தில விலகி நிக்கறது தான் மரியாதை. இது இருபாலினருக்கும் பொது".

"நீ சொல்றது புரியுது காதம்பரி. ஆனா...."

"போதும் ராகவ். இனி இதைப் பற்றி பேசவேணாம். உண்மையிலேயே உங்களுக்கு என்மேல் பிரியமும் மதிப்பும் இருந்தா நீங்க நிச்சயம் நான் என்ன சொல்லவரேன்னு புரிஞ்சுக்குவீங்க."

அடுத்தநாள் மாலை ராகவை அழைத்தபோது,

"இப்போதான் வீட்டுக்குள்ள நுழையறேன். கிருஷ்ணபவன் அல்வாவும் முல்லைப்பூவுமாய்..." கடகடவெனச் சிரித்தான் ராகவன்.

"ராகவ்! விசு காவேரிகிட்டப் பேசணுமாம். அவகிட்ட போனைக் கொடு." என்றாள்.

காவேரியிடம் "நல்லா இருக்கீங்களா? காதம்பரியும் நானும் அப்பா

சதாபிஷேகத்துக்கு வரலாம்னு திட்டம் போட்டிருந்தோம். பரிசு கூட வாங்கி வச்சிருந்தோம். பத்திரிகை அனுப்பாட்டியும் பரவால்ல. பரபரப்புல மறந்துட்டிங்க போல. இதோ இப்போ வரோம். நல்ல டிகிரி காப்பியும் உங்க சாத்துரு கார சேவையும் தயாரா வைங்க" என்றான் விசு ஏதோ நெடுநாள் பழகியவன் போல் உரிமையாக.

"இதோ அண்ணா, எதையும் மனசுல வச்சுக்காதிங்க. காதம்பரியோட தாராளமா இப்போ வரலாம்" என்று சிரித்தவளாய் ராகவை நெருங்கி அவன் கையிலிருந்த முல்லையைச் சூடிக்கொண்டாள் காவேரி.

கருமேகங்கள் விலகிட சந்தேகச் சூரியன் இளஞ் சிவப்போடு மறையத் தொடங்கியிருந்தான்.



கட்டுரை வெளி

# காலக்குரல்

பாட்டாளி


கே: நீங்கள் சிறையிலிருந்து திரும்பிய பின்னர்தான் கட்சி இரண்டாக உடைந்தது...

ப: ம்... நெஞ்சையே பிளந்துச்சு அந்தப் பிளவு.

கே: இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் மார்க்சிஸ்ட் கட்சியும் சேர வேண்டும் என்று நினைக்கிறீர்களா?

ப: மனசார நெனைக்கிறேன். நெறைய பேர் அப்படி நெனைக்கிறாங்க.

கே: ஆனால், இடதுசாரி இயக்கங்கள் வரலாற்றிலேயே மோசமான பின்னடைவைக் கண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில்கூட இரு கட்சிகளும் சேர்வதற்கான அறிகுறிகளைப் பார்க்க முடியவில்லையே?







ப: காலம் கனியணும்னு நெனைக்கிறேன். ஆனா, அது நிச்சயம் நடக்கும். இடதுசாரி இயக்கங்கள் ஒண்ணா சேரணும். அது இந்தியாவோட தேவை.

இது தமிழகத்தின் மூத்த கம்யூனிஸ்டின் குரல். சுதந்திரப் போராட்ட வீரரும் அப்பழுக்கற்ற கம்யூனிஸ்ட் போராளியுமான தோழர் நல்லகண்ணு அவர்கள். (டிசம்பர் 26 2014 அன்று பத்திரிகையாளர் சமஸ் அவர்களின் நேர்காணல்)

அடுத்து.... ஒரு குரல்.

இடதுசாரி ஒற்றுமையை காப்போம்!

“இன்றைய அரசியல் பின்னணியில், உழைக்கும் மக்கள் எதிர்கொண்டுள்ள சவால்களை எதிர்த்து முறியடித்திடவும், நாட்டின் மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசையும், அதன் அரசமைப்புச்சட்டத்தையும் பாதுகாத்திடவும் இடதுசாரிக் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு, இடதுசாரி ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டியது அவசியம்“.

இது கேரள மாநிலம், கண்ணூரில் நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 23ஆவது அகில இந்திய மாநாட்டில் கட்சியின் பொதுச் செயலாளர் சீத்தாராம் யெச்சூரி அவர்களின் துவக்கவுரை.

இது தலைவர்களின் முழக்கம். ஆசி. விருப்பம். எண்ணம். எதிர்பார்ப்பு. ஆனால் சூழலில் ஒற்றுமைக்கான அதன் தேவைக்கான பொத்தாம் பொதுவான விருப்பக் குரல் அவ்வப்போது எழுகிறதே தவிர, ஒலிக்கிறதே தவிர அதற்கான தீர்மானகரமான செயல்வடிவம் எடுக்கவே இல்லை. இந்தச் சூழலில்தான் கம்யூனிஸ்ட் கட்சி மாலெ

மக்கள் விடுதலை "காலத்தின் தேவை கம்யூனிஸ்டுகளின் ஒற்றுமையே" என்கிற வரலாற்றுத் தேவைக்கான முழக்கத்தை முன் வைத்து, அதைத் தன் செயல் திட்டங்களில் முன்னுரிமை கொடுத்து, 2022ஆம் ஆண்டின் ஏப்ரல் 22 அன்று கோவையில் ஒரு வெற்றிகரமான மாநாட்டை நடத்தி முடித்து, அதன் தொடர்ச்சியாக 'தமிழ்நாடு கம்யூனிஸ்டுகளின் முன்னணி' என்கிற இயக்கமொன்றைக் கட்டமைத்து, தமிழ்மண்ணில் களமாடி வருகிற அனைத்துக் கம்யூனிஸ்ட் கட்சிகளையும் இயக்கங்களையும் ஒன்றிணைத்து, இலக்கை, குறிக்கோளைச் சாத்தியமாக்க, நிறைவேற்ற களமாடுகிறது கம்யூனிஸ்ட் கட்சி மாலெ மக்கள் விடுதலை. அதன் பயண வழித்தடத்தில் புதிய மனிதனும் பங்கேற்கிறான்.

இனி எதிர்வரும் ஒவ்வொரு மாத இதழ்களிலும் "காலத்தின் தேவை கம்யூனிஸ்டுகளின் ஒற்றுமையே" என்கிற பொதுத்தலைப்பில் மார்க்சிய அறிஞர்களின், ஆளுமைகளின் தொடர் கட்டுரைகளின் அணிவகுப்பு இடம்பெறும் என்பதற்கான முன்னுரையே இது.



# ‘கீற்று’வில் புதிய மனிதன்

அன்பிற்குரிய புதிய மனிதன் வாசகர்களுக்கு...

தமிழ் இணைய வாசிப்புலகில் புகழ்பெற்ற தளமாக விளங்கும் கீற்று இணையதளத்தில் சிற்றிதழ்கள் பகுதியில், இனி வரும் ஒவ்வொரு புதிய மனிதன் இதழ்களும் வலையேற்றப்பட்டு வாசிக்கக் கிடைக்கும் என்பதைப் பெரு மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

கீற்றுவில் சிற்றிதழ்கள் வரிசையில் தனியிடம் ஒதுக்கி வலையேற்ற இசைவளித்த தோழர் கீற்று நந்தன் அவர்களுக்கு புதிய மனிதன் தன் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறான்.

பொறுப்பாசிரியர்



எங்களின் தாகம்

சாதி ஒழிந்த

தன்னாட்சி கொண்ட

சோசலிசத் தமிழ்நாடு

